**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102107

1. District : சிவகங்கை
மாவட்டம்
PS: ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு
காவல்நிலையம்
Year: 2022
ஆண்டு
FIR No.: 08/2022
மு.த.அ. எண்
Date: 06/09/2022
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 15.6.2022
நாள் முதல்
Date to : 05.09.2022
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 06.09.2022
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 1630 hrs
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) VOL-II
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 1700 hrs
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: ஊராட்சி மன்ற அலுவலகம், அலவாக்கோட்டை, சிவகங்கை மாவட்டம்
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : சுமார் 21 km. வடக்கு
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : தி. இளங்கம்பன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : திரு நாகுக்கரசு
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : விவசாயி
தொழில்
(g) Address : இந்திரா நகர், அலவாக்கோட்டை, சிவகங்கை மாவட்டம்
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. பிரகாசம், ஊராட்சி மன்ற தலைவர், அலவாக்கோட்டை ஊராட்சி, சிவகங்கை மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 06.09.2022 தேதி மாலை 16.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், அலவாக்கோட்டையை சேர்ந்த திருநாவுக்கரசு மகன் திரு.இளங்கம்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட அலவாக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர், திரு.பிரகாசம், ஆகியோர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 06.09.2022-ம் தேதி மாலை 17.00 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/2022 u/s 7 of Prevention of Corruption Act 1988(as amended in) Act 16 of 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு,

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

T இளங்கம்பன். 06.09.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 06/09/22

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
06.09.2022 at 1800 hrs

Name: பெயர் அ. ஜான் பிரிட்டோ
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ..........
VAC, SVGA

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.8/2022 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

அனுப்புநர், தி.இளங்கம்பன், த/பெ.திருநாவுக்கரசு, இந்திரா நகர், அலவாக்கோட்டை, சிவகங்கை வட்டம், சிவகங்கை மாவட்டம், பெறுநர், காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் அலவாக்கோட்டை கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அலவாக்கோட்டை கிராமத்தில் எனது வீட்டிற்கு அருகில் செங்கல் சூளை நடத்துவதற்கு online மூலம் தேவையான ஆவணங்களை 18.05.2022 அன்று பதிவேற்றம் செய்து அரசாங்கத்தில் பதிவுச்சான்று பெற்றேன். அதன்பின்னர் 15.06.2022 அன்று நான் அலவாக்கோட்டையில் உள்ள பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று, ஊராட்சி மன்ற தலைவர் திரு.பிரகாசம் அவர்களை சந்தித்து, அவரிடம் அலவாக்கோட்டை பஞ்சாயத்தில் செங்கல் சூளை நடத்துவதற்கு தொழில் உரிம வரி ரசீது வேண்டியும் மற்றும் மின் இணைப்பு பெறுவதற்காக வேண்டி பஞ்சாயத்து அனுமதி கடிதமும் வீட்டு வரி ரசீதும் தருமாறு தனித்தனியாக 2 மனுக்களை கொடுத்தேன். அப்போது அவர் என்னிடம், ”மின் இணைப்புக்கு அனுமதி கடிதம் வழங்குவதற்கு ரூ.30,000/- தருமாறு லஞ்சம் கேட்டார். நான் அவரிடம், பணத்துக்கு சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறேன், உள்ளூர்காரனிடம் எதற்கு இவ்வளவு கேட்கிறாய் என்று சொன்னபோது, அவர் எல்லாரும் வாங்கிறதுதான், உங்களுக்காக ரூ.5000/- குறைத்துக்கொண்டு, ரூ.25,000/- கொடுங்க அனுமதி கடிதம் எழுதி கையெழுத்து போட்டுத்தருகிறேன் என்று சொன்னார். நான் சரி என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். அதன்பின்னர் 13.07.2022 அன்று அலவாக்கோட்டை ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த பஞ்சாயத்து கிளார்க் திருமதி.கலைச்செல்வியிடம் தொழில் உரிம வரி பற்றி கேட்டேன், அவர் சொன்னதன்பேரில் ரூ.300/- செலுத்தி தொழில் உரிம வரி ரசீது மட்டும் வாங்கிக்கொண்டேன். அப்போது தலைவர் திரு.பிரகாசம் அங்கு இல்லை. எனவே, பஞ்சாயத்து கிளார்க் திருமதி.கலைச்செல்வியிடம், செங்கல் சூளைக்கு வீட்டு வரி ரசீது மற்றும் மின் இணைப்புக்கு அனுமதி கடிதம் பற்றி கேட்டதற்கு, தலைவரை பார்த்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறினார். அதன்பின்னர், 30.08.2022 அன்று அலவாக்கோட்டை பஞ்சாயத்து அலுவலகம் சென்று தலைவர் திரு.பிரகாசம் அவர்களை சந்தித்து மேற்படி வீட்டு வரி ரசீது மற்றும் அனுமதி கடிதம் பற்றி கேட்டதற்கு, அவர் என்னிடம், ”நான்தான் அன்றைக்கே உங்களிடம் சொல்லிவிட்டேன், நான் கேட்ட பணத்தை

கொடுத்துட்டு வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொன்னார். நான் 2 நாட்கள் கழித்து வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பின்னர் 02.09.2022 அன்று மதியம் சுமார் 12 மணியளவில் அலவாக்கோட்டை ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு அருகில் நின்றுகொண்டிருந்த தலைவர் திரு.பிரகாசம் அவர்களை சந்தித்து, அவரிடம், "செங்கல் சூளைக்கு மின் இணைப்பு பெற வீட்டு வரி ரசீது மற்றும் பஞ்சாயத்து அனுமதி கடிதம் அவசரமாக தேவைப்படுகிறது, பணம் இப்போதைக்கு என்னிடம் இல்லை" என்று கூறியதற்கு, முன்பணமாக ரூ.10,000/- கொடுத்துவிட்டு வீட்டு வரி ரசீது மற்றும் அனுமதி கடிதம் வாங்கிக்கொள்ளுங்கள் என்றும் மீதமுள்ள பணத்தை 2 நாள் கழித்து கொடுங்க என்றும் என்னிடம் சொன்னார். நான் ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டேன். அதன் பின்னர் 05.09.2022 அன்று காலை சுமார் 09.45 மணியளவில் ஊராட்சி மன்ற அலுவலகம் சென்று அங்கிருந்த ஊராட்சி மன்ற தலைவர் திரு.பிரகாசம் அவர்களை சந்தித்து, வீட்டு வரி ரசீது மற்றும் அனுமதி கடிதம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டதற்கு, அவர் என்னிடம், "நீங்கள் கொடுத்த பழைய மனு தொலைந்துவிட்டது, புதிதாக ஒரு மனு எழுதிக்கொடுங்கள்" என்று சொன்னார். நான் அவரது அலுவலகத்திலேயே ஒரு வெள்ளைப்பேப்பரில் மனு எழுதி கொடுத்தேன். மனுவை வாங்கிய தலைவர் அதில் கையொப்பம் செய்தார், அப்போது நான் அவரிடம் EB அலுவலகத்தில் நகல் கேட்டதாக சொல்லி, நான் எழுதிக்கொடுத்த மனுவின் நகலினை கேட்டுப்பெற்றுக்கொண்டேன். பின்னர், தலைவர் திரு.பிரகாசம் அந்த மனுவை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் வைத்துவிட்டு என்னிடம், "திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய 2 நாள் Training-க்கு பட்டுக்கோட்டை செல்வதாகவும், நீங்க புதன்கிழமை வந்து அட்வான்ஸ் பணம் ரூ.10,000/-த்தை கொடுத்துவிட்டு, வீட்டு வரி ரசீது மற்றும் மின் இணைப்புக்கு அனுமதி கடிதத்தை வாங்கிகொண்டு, EB connection பெற்றுக்கொள்ளுங்கள், மீதப்பணம் ரூ.15,000/-த்தை கண்டிப்பாக கொடுத்துவிட வேண்டும், இல்லாவிட்டால் தொழில் செய்ய முடியாது" என கண்டிப்பாக கூறிவிட்டார். நான் 2 நாட்கள் கழித்து வருவதாக அவரிடம் கூறிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுத்து செங்கல் சூளைக்கு வீட்டு வரி ரசீது மற்றும் மின் இணைப்புக்கு அனுமதி கடிதம் பெற விருப்பம் இல்லை. ஆகவே, என்னிடம் லஞ்சம் கேட்ட அலவாக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் திரு.பிரகாசம் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 1) எனது செங்கல் சூளையின் பதிவுச்சான்று UDYAM-TN-21-0012120-ன் நகல், 2) தொழில் உரிம வரி ரசீது எண்.148, நாள்.13.07.2018-ன்

நகல் மற்றும் 3) செங்கல் சூளைக்கு வீட்டு வரி ரசீது மற்றும் மின் இணைப்புக்கு அனுமதி கடிதம் வேண்டிய மனுவின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு ஒப்பம் தி.இளங்கம்பன், 06.09.2022.

Sir, Received the complaint on 06.09.2022 at 16.30 hrs and conducted confidential enquiry. I registered a case in Sivagangai V&AC Cr.No.8/2022 u/s 7 of Prevention of Corruption Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 06.09.2022 at 17.00 hrs. sd.A.John Britto, DSP, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

A. [signature] 06/09/22